# முதல் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு : 11
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் : 11341
மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி -I

**குறிப்பு 1)அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** 14x1=14

1. யாரோ உனைப்போல் அனுதினம் உழைப்போர் ? – இது எவர் மொழி ?
   அ) நடராசன் ஆ) புல் இ) வாய்க்கால் ஈ) நாங்கூழ்
2. கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லை முதலிய பொருள்களைத் தரும் சொல்
   அ) மரை ஆ) திரை இ) வரை ஈ) உரை
3. துன்பப்படுபவர் ..................
   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
4. காவடிச் சிந்தின் தந்தை .....................
   அ) இரசூல் கம்சதோவ் ஆ) மல்லார் மே
   இ) அண்ணாமலையார் ஈ) வால்ட் விட்மன்
5. 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்ற நூலின் ஆசிரியர் .........................
   அ) நம்மாழ்வார் ஆ) மசானுபு ஃபுகோகா இ) மங்கை ஈ) சொக்கலிங்கம்
6. 'சாகுல் அமீது' என்னும் இயற்பெயரை உடையவர் ................
   அ) இராசேந்திரன் ஆ) இன்குலாப் இ) சிவராமலிங்கம் ஈ) பிரமிள்
7. SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயர் ...............
   அ) படகு ஆ) நாவாய் இ) கப்பல் ஈ) விசைப்படகு
8. தமிழக அரசின் சின்னம் ................
   அ) ஆலமரம் ஆ) பனைமரம் இ) கோவில் கோபுரம் ஈ) திருவாயில்
9. திருவாசகம் முழுமையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ...............
   அ) பெஸ்கி ஆ) ஜி.யு.போப் இ) கால்டுவெல் ஈ) வீரமாமுனிவர்
10. சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளை எடுத்தியம்பும் நூல் .............
    அ) புறநானூறு ஆ) பரிபாடல் இ) பதிற்றுப்பத்து ஈ) புறப்பொருள் வெண்பாமாலை
11. விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவியவர் ..................
    அ) காந்தியடிகள் ஆ) தாகூர் இ) நேரு ஈ) குமாரசாமி
12. குறியீட்டுக் கவிதையை உருவாக்கியவர் ..........................
    அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன் இ) மனோரமா பிஸ்வாஸ் ஈ) மல்லார்மே
13. 'மாநகர்' – இலக்கணக் குறிப்பு தருக.
    அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) தொழிற்பெயர்
14. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ................
    அ) துள்ளல் ஆ) அகவல் இ) செப்பல் ஈ) தூங்கல்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி -II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
16. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
17. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல் ரகுமான் யாரிடம் கேட்கிறார்?
18. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x2=4

19. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) கொழுஞ்சோறு ஆ) முன்னுரை
23. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.
    அ) பிரிந்தோர் ஆ) மலிந்த
24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
    அ) கால்நடை ஆ) பிண்ணாக்கு
25. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
26. மயங்கொலி சொற்களை ஒரே தொடரில் அமைந்து எழுதுக.
    குரை, குறை
27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
    அ) மதில்மேல்பூனை ஆ) அவசரக்குடுக்கை
28. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் – ஒரே தொடராக மாற்றுக.
29. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.
30. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்கபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    i) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக் கூடாது, நன்மை செய்யக் கூடாது உதவியை.

## பகுதி -III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

31. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
32. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
33. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.



OPPO A17

CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. 'தாமஸிகம்' என்றால் என்ன ?

36. சமண பள்ளிகளும் பெண்கல்வியும் –குறிப்பு வரைக.

37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி விளக்குக.

38. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா ? – நும் கருத்தை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x4=12

39. அ) வேற்றுமை அணியை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்குக..

40. 'வாய்மையே வெல்லும்' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

41. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினை எழுதுக.

42. தமிழாக்கம் தருக.

1) Education is the most powerful weapon, Which you can use to change the world.

2) Culture does not make people; people make culture.

3) Nobody can hurt me without my permission.

4) you must be the change you wish to see in the world.

43. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களை எழுதுக.

1) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றி சென்றிடுவான் (ஆளி) ..................

2) அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ...............

3) வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) ...............

4) வேடம் போட்டவன் வேடதாரி ; பட்டம் வாங்கினவன் ? (தாரி) ...................

**பகுதி - IV** 3x6=18

**அனைத்து வினாக்களுக்கு விடை தருக.**

44. அ) சிறைப் புறத்தானாகிய தலைவனுக்குத் தோழி சொல்லியது யாது ?

**(அல்லது)**

ஆ) "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளை எழுதுக.

45. அ) "கல்லும் கதை சொல்லும்" – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருத்துவதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.



OPPO A17
2024/01/22 19:17

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

CamScanner

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.**

அ) 'உண்டாலம்ம' ..................... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

ஆ) 'விடற்கு' – என முடியும் குறட்பாவை எழுதுக.

**********

www.Padasalai.Net

OPPO A17
2024/01/22 19:18

CamScanner